# தோழர் பெத்தல்ராஜ் மறைந்தார்



தமிழகத்தில் K.G.போஸ் அணியினை கட்டுவதில் பெரும் பங்காற்றியவர்களில் தோழர் D.J.J.பெத்தல்ராஜ் அவர்களும் ஒருவர். அவரது தொழிற்சங்க பணி காரணமாக நிர்வாகம் அவரை பாண்டிச்சேரியில் இருந்து பழனிக்கு மாற்றல் செய்தது. அதனை பொருட்படுத்தாமல் அவர் மதுரை மாவட்டத்திலும் தன்னுடைய அற்புதமான தொழிற்சங்க பணியினை ஆற்றியனார். அது மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் மிகச்சிறப்பாக பணியாற்றினார். ஒன்று பட்ட NFTE லைன்ஸ்டாஃப் சங்கத்தில் K.G.போஸ் அணியினரை செயல்படவிடாமல் தடுக்க தலைமை முயற்சித்த போது உருவாக்கப்பட்ட ”தொழிற்சங்க ஜனநாயக உரிமை பாதுகாப்புக் குழு”வின் தலைவராக இருந்தவர். மிகச்சிறந்த பேச்சாளர். இலாகாவின் சட்ட திட்டங்கள் அனைத்திலும் பாண்டித்தியம் பெற்றவர். மேலும் மாவட்ட மாநில சங்க பொறுப்புகள் பலவற்றை எடுத்து மிகச்சிறப்பாக செயல்பட்டவர் தோழர் D.J.J.பெத்தல்ராஜ். அவர் பணியில் இருந்த போதே ஒரு முறை இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. தற்போது உடல் நலக் குறைவு ஏற்பட்டதின் காரணமாக சென்னையில் ஒரு சில நாட்களுக்கு முன் மீண்டும் ஒரு முறை இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. **ஆனால் சிகிச்சை பலனின்றி தோழர் D.J.J.பெத்தல்ராஜ் இன்று (21.09.2015) மாலை 3 மணியளவில் காலமானார்.**

தோழர் D.J.J.பெத்தல்ராஜ் அவர்களின் மறைவிற்கு தனது அஞ்சலியை தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தெரிவித்துக் கொள்கிறது. அவரது பிரிவால் குடும்பத்தாருக்கும் தோழர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது.